(2022-23-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2 )

**SUBJECT CODE** 22 UTM 615

**REG.NO:**

என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) பொள்ளாச்சி

பருவ இறுதித் தேர்வுகள் : மே – 2025

பி.ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 50

ஆறாவது பருவம் நேரம் : 3 மணி நேரம்

பகுதி – 3

## நாட்டுப்புறவியல்

பகுதி – அ **(10x1=10** மதிப்பெண்கள்)

***பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*** (K1)

1. நாட்டுப்புறவியலைக் குறிக்கும் “Folklore“ என்ற சொல்லை உருவாக்கியவர் யார்?

   அ) வில்லியம் பாஸ்கம் ஆ) வில்லியம் ஜான் தாமஸ் இ) ஜான் ஹெரால்டு ஈ) டார்சன்

2. தொல்காப்பியர் விடுகதையை எப்பெயரால் குறிப்பிட்டுள்ளார்?

   அ) பாட்டு ஆ) உரை இ) நூல் ஈ) பிசி

3. சிலம்பாட்டம் மராட்டிய மொழியில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

   அ) லாட்டி ஆ) டல்லாக்கடி இ) லாடிகீலா ஈ) நெடுவடி

4. கள ஆய்வில் சேகரிப்புத் திட்டங்களை கென்னத் கோல்டு ஸ்டெயின் எத்தனையாக வகைப்படுத்தியுள்ளார்?

   அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

5. கீழ்க்கண்டவற்றுள் கொங்குநாட்டுக் கதைப்பாடல் எது?

   அ) முத்துப்பட்டன் கதை ஆ) கான்சாகிபு சண்டை இ) அண்ணன்மார் கதை ஈ) ஐவர் ராசாக்கள் கதை

***பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.*** (K2)

6. நாட்டுப்புறப்பாடல்கள் எத்தகைய தொடரமைப்பில் அமைந்துள்ளன?
7. குழந்தை மாலை சுற்றிப் பிறந்தால் யாருக்கு ஆகாது?
8. கரகம் என்பதற்குப் பேராசிரியர் தரும் பொருள் யாது?
9. களப்பணி ஆய்வாளரின் சோதனைக் கூடம் என அழைக்கப்படும் பணி எது?
10. கொங்குநாட்டில் வழங்கப்படும் ஏதேனும் ஒரு பழமொழியைச் சுட்டுக.

***பகுதி – இ*** (5 x 3 = 15)

***பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும்.*** (K3)

11. அ) நாட்டுப்புறவியலை சு. சக்திவேல் எவ்வாறு வகைப்படுத்தியுள்ளார்?

    (அல்லது)

    ஆ) தாலாட்டுப் பாடல்கள் என்றால் என்ன? அதன் பிரிவுகள் யாவை?

(த.பி.பா.)

12. அ) விடுகதை என்றால் என்ன? அதன் தன்மைகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

ஆ) நாட்டுப்புற மக்களிடையே நிலவும் மழை பற்றிய நம்பிக்கைகளுள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.

13. அ) சு. சக்திவேல் கூறும் விளையாட்டு பற்றிய கொள்கைகள் யாவை?

(அல்லது)

ஆ) நாட்டுப்புற மருத்துவ நம்பிக்கைகளைப் புலப்படுத்துக.

14. அ) கள ஆய்வில் மேற்கொள்ளப்படும் சேரிப்புத் திட்டங்களை கென்னத் கோல்டு ஸ்டெயின் என்பவர் எவ்வாறு வகைப்படுத்தியுள்ளார்?

(அல்லது)

ஆ) வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாடு என்றால் என்ன?

15. அ) கொங்கு வட்டாரப் பழமொழிகள் ஐந்தினை எழுதுக.

(அல்லது)

ஆ) கொங்கு நாட்டில் வழங்கப்பெறும் விடுகதைகளுள் எவையேனும் ஐந்தைச் சுட்டுக.

***பகுதி – இ*** (5 x 5 = 25)

***பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு மட்டும் விரிவாக விடையளிக்கவும்.***

(K4 & K5)

16. அ) நாட்டுப்புறப் பாடல்களின் வகைப்பாடுகளை விவரிக்க.

(அல்லது)

ஆ) நாட்டுப்புறக் கதைகளின் வகைப்பாட்டைத் தொகுத்தெழுதுக.

17. அ) நாட்டுப்புறக் கலைகளை வகைப்படுத்தி விளக்குக.

(அல்லது)

ஆ) நாட்டுப்புற வழிபாட்டு முறைகளை விவரிக்க.

18. அ) நாட்டுப்புற விளையாட்டுக்கள் குறித்து விரிவாக எழுதுக.

(அல்லது)

ஆ) ஊர்ப்பெயர்களின் அமைப்பு முறையைத் தொகுத்தெழுதுக.

19. அ) நாட்டுப்புறவியல் கள ஆய்வில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகளைத் தெளிவுபடுத்துக.

(அல்லது)

ஆ) எழுத்திலக்கியத்தில் நாட்டுப்புற இலக்கியம் பெற்றுள்ள செல்வாக்கைப் புலப்படுத்துக.

20. அ) கொங்கு நாட்டுப்புற நம்பிக்கைகளை விளக்குக.

(அல்லது)

ஆ) கொங்கு நாட்டில் வழங்கும் நாட்டுப்புறக் கதைகள் குறித்து விவரிக்க.